



சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், நேற்று முன்தினம் (13.08.2025) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலகக் கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டுப் பணிகள் குறித்தும், மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்தும் சுற்றுலா அலு வலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா. கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச.கவிதா, கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சுற்றுலாத் துறை மூலம்

# ரூ.78.59 கோடி மதிப்பீட்டில் 20 இடங்களில் வளர்ச்சிப் பணிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை, ஆக.15-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில்(13.08.2025) நேற்று முன்தினம், சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா வளாகத்தில் மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் மானியக்கோரிக்கையின் போது சுற்றுலாத் துறையின் மீது தனிக்கவனம் கொண்டு பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறார். அதனை செயல்படுத்தும் விதமாக சுற்றுலாத் துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முடியும் தருவாயில் உள்ள சுற்றுலா மேம்பாடு மற்றும் கட்டட பணிகளான பூம்புகார் பாரம்பரிய நகரத்தினை ரூ.21.98 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்தல், கரூர் மாவட்டம் ரூ.2.29 கோடி மதிப்பீட்டில் பொன்னனியாறு நீர் தேக்கத்தினை சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். கன்னியாகுமரி மாவட்டம் ரூ. 3.11 கோடி சித்தார் அணைகள் மற்றும் நீர் தேக்கத்தினை சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல்.

நீலகிரி மாவட்டத்தில் ரூ.2.85 கோடி மதிப்பீட்டில் உதகை படகு இல்லத்தில் சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம் தலமாக உருவாக்குதல், செங்கல்பட்டு மாவட்டம் முதலியார் குப்பம் ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம் தலமாக உருவாக்குதல் மற்றும் நாமக்கல் மாவட்டம் கொல்லி மலையில் ரூ. 1.87 கோடி மதிப்பீட்டில் சாகச மற்றும் சுற்றுச்சூழல் முகாம் தலமாக உருவாக்குதல், கடலூர் மாவட்டம் பிச்சாவரம் பகுதியில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல்,

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.3.98 கோடி மதிப்பீட்டில் திற்பரப்பு அருவியை சுற்றுலா தலமாக மேம்படுத்துதல், மாமல்லபுரத்தில் ரூ.8.00 கோடி செலவில் மரகத பூங்காவை பொதுதனியார் பங்களிப்பு முறையில் “ஒளிரும் தோட்டம்” அமைத்தல், ஏற்காட்டில் ரூ.9.82 கோடி மதிப்பீட்டில் அழகியல் நிலப்பரப்பு, காட்சி முனைகள், ஏரி முகப்பு, தெரு அலங்காரம் போன்ற சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல், சஞ்சீவிராயன் கோவில் பகுதியில் ரூ.0.93 கோடி மதிப்பீட்டில் காட்சி முனை அமைத்தல்,

நாகமரை பகுதியில் ரூ.0.48 கோடி மதிப்பீட்டில் காட்சி முனை அமைத்தல், ஜவ்வாது மலை தேனீ பூங்கா பகுதியில் ரூ.0.42 கோடி மதிப்பீட்டில் காட்சிமுனை அமைத்தல் மற்றும் ஜவ்வாது மலையில் சுற்றுச்சூழல் பூங்கா பகுதியில் ரூ.0.45 கோடி மதிப்பீட்டில் காட்சிமுனை அமைத்தல், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.3.26 கோடி மதிப்பீட்டில் மாத்தூர் தொட்டி பாலத்தில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல்,

அரியலூர் மாவட்டம் ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா தேவாலயப் பகுதியை ரூ.1.29 கோடி மதிப்பீட்டிலும், சிவகங்கை மாவட்டம் பிரான் மலைப் பகுதியை ரூ.0.57 கோடி மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம் விஜயாபதி பகுதியை ரூ.0.96 கோடி மதிப்பீட்டிலும், தெற்கு கள்ளிக்குளம் பகுதியில் ரூ.3.49 கோடி மதிப்பீட்டிலும் தேவாலயப் பகுதி மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ரூ.1.68 கோடி மதிப்பீட்டிலும் கழுகு மலை பகுதி ஆகிய இடங்களை வழிபாட்டு சுற்றுலா தலங்களாக மேம்படுத்துதல், என மேற்கண்ட இடங்களில் நடைபெறும் பணிகளை விரைந்து முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் மருத்துவர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச.கவிதா, கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முசிறி விவசாயிகளுக்கான வாழைப்பழ குளிர் சேமிப்பகம் அவசியம்!

## மக்களவையில் அருண் நேரு வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக.15-

பெரம்பலூர் மக்களவை தொகுதி எம்.பி. என். அருண் நேரு, தமிழ்நாட்டின் முசிறி பகுதியில் வாழும் வாழைப்பழ விவசாயிகளின் பிரச்சினையை இன்று மக்களவையில் விதி 377ன் கீழ் முன்வைத்து, மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

காவிரி நதிக்கரையில் வளமாக விளையும் முசிறி, தொட்டியம், குளித்தலை பகுதிகள் மாநிலத்தின் முக்கிய வாழைப்பழ உற்பத்தி மையங்களாகும். புவன், ரச்தாளி, நெந்திரன் போன்ற பல்வேறு இனங்கள் இங்கு விளைவிக்கப்பட்டு நாடு முழுவதும் விநியோகிக்கப் படுகின்றன.

ஆனால், இப்பகுதியில் நவீன குளிர் சேமிப்பு வளாகங்கள் இல்லாத காரணத்தால், விவசாயிகள் அறுவடை காலங்களில் தங்களின் பயிர்களை மிகக் குறைந்த விலையில் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதனால், அவர்களுக்கு பெரும் நிதி இழப்புகள் ஏற்படுகின்றன என்றும், ஆண்டு முழுவதும் செய்த உழைப்பும் வீணாகின்றது என்றும் கவலை வெளியிட்டார்.

திருச்சிராப்பள்ளியில் தேசிய வாழைப்பழ ஆராய்ச்சி மையம் (ICAR NRCB) இருப்பது இப்பகுதியின் மூலதன முக்கியத்துவத்தை காட்டுகிறது.

எனவே, முசிறியில் பெரிய அளவிலான நவீன குளிர் சேமிப்பு வளாகம் அமைப்பதற்கு மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

### ஜூன் 15 முதல் 17, 2025 வரை கனடாவால் நடத்தப்பட்ட 51வது G7

# உச்சி மாநாட்டிற்கு ஒன்றியப் பிரதமர் அழைக்கப்பட்டார் என்பது உண்மையா?

## மக்களவையில் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!



புதுடெல்லி, ஆக.15-

ஜூன் 15 முதல் 17, 2025 வரை கனடாவால் நடத்தப்பட்ட 51வது G7 உச்சி மாநாட்டிற்கு ஒன்றியப் பிரதமரும் அழைக்கப்பட்டார் என்பது உண்மையா? இந்தியா G7 நாடுகளில் உறுப்பினராக இல்லாவிட்டாலும், 2019 முதல் G7 உச்சி மாநாடுகளுக்கு வழக்கமான அழைப்பாளராக இருந்தால், அதன் விவரங்கள் என்ன?உச்சிமாநாட்டின் போது விவாதிக்கப்பட்ட பல்வேறு நிகழ்ச்சி நிரல், உச்சிமாநாட்டின் முடிவு மற்றும் உச்சிமாநாட்டின் போது ஜி7 நாடுகளுடன் ஒன்றியப் பிரதமர் ஏதேனும் இருதரப்பு சந்திப்பை நடத்தினார் என்றால், அதன் விவரங்கள் என்ன என்று மக்களவையில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பினார்.

வெளியுறவுத்துறை அமைச்சகத்தில் மாநில அமைச்சர் ஸ்ரீ பபித்ரா மார்கெரிதா கூறியதாவது : ஒன்றியப் பிரதமர் நரேந்திர மோடி, கனடாவின் ஆல்பர்ட்டாவில் உள்ள கனனாஸ்கிஸில் 1617 ஜூன் 2025 வரை G7 உச்சிமாநாட்டில், அதிகாரப் பூர்வமான அவுட்ரீச் பார்ட்னராக பிரதமர் மார்க் கார்னியின் அழைப்பின் பேரில் பங்கேற்றார். ஒன்றியப் பிரதமர் ஜி7 உச்சிமாநாட்டில் அழைக்கப்பட்ட பிற நாடுகளுடன் இணைந்து எரிசக்தி பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் புதுமை, குறிப்பாக அல்எனர்ஜி நெக்ஸஸ் மற்றும் குவாண்டம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட முக்கியமான தலைப்புகளைப் பற்றி விவாதித்தார்.

இரண்டு விளைவு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன (I) ‘கனனாஸ்கிஸ் காட்டுத்தீ சாசனம்’ மற்றும் (II) ‘ஜி7 கிரிட்டிகல் மினரல்ஸ் செயல் திட்டம்’.ஒன்றிய பிரதமர் மெக்சிகோ ஜனாதிபதியுடன் இருதரப்பு சந்திப்புகளை நடத்தினார்.

டாக்டர். கிளாடியா ஷீன்பாம் பார்டோ, ஜெர்மனியின் பெடரல் குடியரசின் அதிபர் ஹெச். இ. ஃபிரெட்ரிக் மெர்ஸ் மற்றும் கனடா பிரதமர் ஹெச்.இ. மார்க் கார்னி, ஆல்பர்ட்டாவின் கனனாஸ்கிஸில் G7 உச்சிமாநாட்டின் ஓரமாக என்று பதில் கூறினார்.



முதலமைச்சர் அவர்கள் சென்னையிலிருந்து காணொலி காட்சிவாயிலாக கூட்டுறவுத் துறை சார்பில் வயது முதிர்ந் தோர் மற்றும் மாற்றுத்திற னாளி களின் இல்லத்திற்கே சென்று குடிமைப் பொருட்கள் வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தினைத் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் பேரூராட்சி சன்னதிதெருவில் உயர்கல்வித்துறைஅமைச்சர் முனைவர் கோவி.செழியன் குடிமைப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் எஸ். கல்யாண சுந்தரம், க. அன்பழகன், க.சரவணன், சுப.தமிழழகன், செல்வி சி.தமிழ்நங்கை மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# முத்தமிழர் மூச்சொலியே! முரசொலியே வாழியவே!





கையெழுத்துப் பிரதியாய்
கருவாகித் தமிழர்தம்
மெய்யெழுத்தாய், உயிரெழுத்தாய்,
மேவும்உயிர் மெய்யெழுத்தாய்
வையத் தமிழர்நிலை
மாற்றவந்தத் தலையெழுத்தாய்
உய்யும்எங்கள் வாழ்வுக்கே
உணர்வளித்த விழுமியமே!

ஏற்றிஉன்னை மூட்டைகட்டி
இருமுதுகில் சுமந்துவர,
காற்றடித்து மரப்பாலம்
கவிழ்ந்திட "ஓடம்போக்கி"
ஆற்றினிலே கலைஞருடன்
அவர்நண்பர் தென்னனுடன்
சேற்றில் விழுந்தெழுந்த
செல்வமே! நித்திலமே!

மாணுயர்ந்த செந்தமிழர்
மரபுகளை உலகுக்குக்
காணுக எனக்காட்டும்
கருத்துமணிப் பெட்டகமே!
நாணத் தகும்அந்த
"நால்வருணப்" பிற்போக்கை
ஆணிவே ருடன்கிள்ளி
அறுத்தஅறி வாயுதமே!

முரட்டுப் பழமைகளின்
மூட நம்பிக்கை
இருட்டைக் கிழித்தெறிய
எழுந்துவந்த ஒளிக்கதிரே!
மருட்டும் மதவாத
மடமைகளின் கொடுமைகளைப்
புரட்டித் தகர்த்தெறிந்துப்
பொசுக்கவந்த கனற்பிழம்பே!

நாடு,மொழி, கலாச்சார,
நாகரிகம், பண்பாட்டைப்
பாடுதமிழ்ப் பாவியமே!
பைந்தமிழர் உள்ளமெலாம்
ஊடுருவிப் பதிந்ததமிழ்
ஓவியமே! எந்தமிழர்
நீடுபுகழ் வரலாற்றை
நினைவூட்டும் காவியமே!

ஒழிக!எனும் ஒடுக்குமுறை!
உருவற்றுத் தடயமின்றி
அழிக!எனும் அடக்குமுறை!
அத்தனைக்கும் ஈடுதந்தே
முழுவீச்சில் "எண்பத்து
மூன்றாண்டாய்" இயங்கிவரும்
கழகத்தின் கேடயமே!
களமறவர் போர்வாளே!

ஈர்த்திழுத்தே இளைஞர்களின்
இதயத்தில் தமிழுணர்ச்சி
சேர்த்துப் பெருகவைக்கும்
செயலூக்க நிலைக்களமே!
ஆர்த்து மொழிப்போரில்
அணிவகுக்கும் வீரருக்கு
வார்த்துப் படைக்கலன்கள்
வடித்தளிக்கும் உலைக்களமே!

சொத்தெழுதி வைத்திருக்கும்
பத்திரம்போல், எம்நெஞ்சில்
பத்திரமாய் வாழ்கின்ற
சித்திரமே! ஆருயிரே!
கொத்துமலர்ச் சிந்தனைகள்
கொழிக்கின்ற பூக்காடே!
முத்துவிழா வும்தாண்டி
முன்னேறும் பொன்னேடே!

தித்திக்கும் தமிழுக்கோர்
தீங்கென்றால் மறுநொடியே
எத்திக்கும் கேட்கும்
இடியின் எதிரொலியே!
முத்தமிழர்க் கென்றும்உயிர்
மூச்சொலியே! பேச்சொலியே!
தத்துவத்தின் அடைமொழியே!
தன்மானச் சுடரொளியே!

சாத்திரச் சடங்குகளில்
சாதிகளில் வீழ்ந்துழன்ற
மாத்தமிழர் துயில்கலைத்து
வைகறைக்குச் சுடரெடுத்துப்
புத்தவிடி வெள்ளியெனப்
புகழ்த்தலைவர் கலைஞருக்கு
"மூத்தபிள்ளை" யாகவந்த
முரசொலியே! வாழியவே!



கவிச்சுடர் கவிதைப்பித்தன்.





நாமக்கல் மாவட்டத்தில், இராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், பழங்குடியினர் மக்கள் சந்திப்பு மற்றும் துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகள் அரசின் திட்டப்பணிகள் குறித்த மூலப்பள்ளிப்பட்டி, குரங்காத்துபள்ளம், கார்கூடல்பட்டி, பிலிப்பாகுட்டை, பெரப்பன்சோலை, கொளக்கமேடு ஆகிய கிராமங்களில், வசிக்கும் பழங்குடியினர் மக்களுடன் சந்தித்து கள ஆய்வுப் பணி மற்றும் குறை கேட்கும் நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், துறை அரசுச் செயலாளர் க. இலட்சுமி பிரியா, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ச. அண்ணாதுரை ஆகியோர் கால ஆய்வு பணி செய்தனர். இந்நிகழ்ச்சியில், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை நாமக்கல் மாவட்ட தாட்கோ மேலாளரும், மாவட்ட பழங்குடியினர் நல அலுவலருமான பா. இராமசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கே.எஸ்.சுரேஷ்குமார், நாமகிரிப்பேட்டை ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.இராமசுவாமி, அரசு துறை அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.